சுருக்கம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ரூ. 3933.00 இலட்சம் திருத்திய திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்ற நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி 2) துறை

**அரசாணை (நிலை) எண்.96** **நாள்: 27.06.2010**

**படிக்கப்பட்டது:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.75877/2004/ரா.2, நாள் : 20.2.2010.

- - - -

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக இயக்குநர் உடுமலைப்பேட்டை நகராட்சியில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் ரூ. 3933.00 இலட்சம் திருத்திய மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான நிர்வாக அனுமதி கோரியுள்ளார்.

2. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலும் தனது கடிதத்தில் உடுமலைப் பேட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடைத்திட்டம் அமைப்பது குறித்த கருத்துருவானது, ரூ. 4144.00 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான (UIDSSMT) மாநில அளவு ஒப்புதல் வழங்கும் குழுமுன் வைக்கப்பட்டது எனவும், அக்குழுவானது மேற்காணும் திட்டம் ரூ. 3034.00 இலட்சம் செலவில் நிறைவேற்ற அனுமதி வழங்கியது எனவும் தெரிவித்துள்ளார். மேலும் ஒசூர், அருப்புக்கோட்டை மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சிகளுக்கு, 2009 – 10 ஆம் ஆண்டின் அட்டவணைப்படுத்தப்பட்ட விலையின் அடிப்படையில் திருத்திய திட்டமதிப்பீடானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது எனவும், இத்திட்டம் நிறைவேற தேவைப்படும் கூடுதல் கடன்தொகையானது, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத் (TUFIDCO) திடமிருந்து பெற்றுக்கொள்ள அரசு அறிவுறுத்தியது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) இம்மூன்று நகராட்சிகளின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு, உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மட்டும் பாதாள சாக்கடைத்திட்டம் நிறைவேற்ற உள்ளாட்சியின் பங்குத் தொகையினை கடனாக வழங்குவதாக தனது கடிதத்தில் கூறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த தேவைப்படும் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையானது பின்வரும் நிதிப்பங்கீட்டின் அடிப்படையில் ஏற்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | - ரூ. 2427.38 இலட்சம் |
| மாநில அரசின் பங்கு | - ரூ. 303.43 இலட்சம் |
| உள்ளாட்சியின் பங்கு | - ரூ. 1202.19 இலட்சம் |
| மொத்தம் (திருத்திய திட்ட மதிப்பீடு) | - ரூ. 3933.00 இலட்சம் |

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், தனது 30.12.2008 நாளிட்ட கடிதத்தில் ஓசூர், அருப்புக்கோட்டை மற்றும் உடுமலைப்பேட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அனுப்பப்பட்ட மூலக்கருத்துருவில் மற்ற நகரங்களைத் தவிர்த்து, தற்போது உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு மட்டும் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 3933.00 இலட்சம் செலவினத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேலே பத்தி 4 –ல் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து, உடுமலைப்பேட்டை நகராட்சிக்கு சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (UIDSSMT) கீழ் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ. 3933.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளை செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 14930/MAWS /2010, நாள் : 5.5.2010 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசு முதன்மைச் செயலர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 5.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 35.

ஆணையர், உடுமலைப்பேட்டை நகராட்சி , உடுமலைப்பேட்டை.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை -9.

நகல்

முதன்மைச் செயலரின் நேர்முக செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நிதி ( நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை), சென்னை -9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவுசெலவு/அந.2/)
துறை, சென்னை – 9.

-/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/-

பிரிவு அலுவலர்